20.03.2025 STC 13/2023 DW1. ஆண்டனி மேரி

கடந்த 06.09.2024ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற M.P.06/2025 dated 07.03.2025ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1. என்னுடைய சொந்த ஊர் முட்டம் என்றால், சரிதான். என்னுடைய வீட்டு முகவரி உயரதெரு, அரசு தொடக்கப்பள்ளிக்கு எதிரில், முட்டம் என்றால், சரிதான். மேற்சொன்ன முகவரியில் உள்ள குடும்ப உறுப்பினர்களுக்கும் எனக்கும் தொடர்பு உள்ளது என்றால், சரிதான்.

2. நான் 2012 ஆண்டுக்கு பிறகு சென்னையில் வசித்து வருகிறேன் என்றால், சரிதான். மேற்படி சென்னையில் உள்ள முகவரிகளை வைத்து தான் நான் Union Bank, வண்ணாரபேட்டை கிளையில் வங்கிகணக்கு தொடங்கி காசோலை புத்தகங்கள் பெற்றேன் என்றால், சரிதான். புகார்தாரருடைய மருமகனான கோர்பிஸ் என்பவரின் நண்பரான ரூஸ்வெல்ட் பெர்னால்டோ என்பவரிடம் இருந்து ரூபாய் 2லட்சத்து 50ஆயிரம் கடனாக எனது தாயார் பெற்றார் என்றால், சரிதான்.

3. மேற்படி கடனை Union Bank மற்றும் Indian Bank மூலம் ரூஸ்வெல்ட் பெர்னால்டோ என்பவரின் வங்கிக் கணக்கில் 2லட்சத்து 79 ஆயிரம் மற்றும் 70 ஆயிரம் அனுப்பி கடனை முடித்துக் கொண்டேன் என்றால், சரிதான். மேற்படி கடனுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால், சரியல்ல.

4. அது என்ன சம்மந்தம் என்றால், 2017ம் வருடத்திலிருந்து மேற்படி கடனுக்கு புகார்தாரர் வங்கிக் கணக்கில் நான் வட்டிப் பணங்களை 2022செப்டம்பர் வரை செலுத்தி உள்ளேன். மேலும் மேற்படி கடன் தொகைக்காக அசலுடன் சேர்த்து சுமார் 19லட்சத்து 43 ஆயிரத்து 30 ரூபாய் செலுத்திவிட்டேன். ஆனால் அவர்கள் என்னிடம் மேலும் வட்டி வேண்டும் என்று கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி சங்கதிகள் உண்மைக்கு புறம்பானது என்றால், சரியல்ல.

5. மேற்படி அதிக வட்டிக் கேட்டதற்கு சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் ஏதேனும் புகார் அளித்தேன் என்றால், இல்லை. மேற்படி ரூஸ்வெல்ட் பெர்னால்டோவிடம் வாங்கிய கடனிற்காகா புகார்தாரரிடம் வட்டியுடன் சேர்த்து அசலையும் கொடுத்துவிட்டேன் என்பது பொய்யாகும் என்றாலும், இவ்வழக்கு

புகார்தாரரிடம் வாங்கிய கடனுக்காக தான் பணபரிமாற்றங்கள் செய்யப்பட்டது என்றாலும், சரியல்ல.

6. மேற்படி ரூஸ்வெல்ட் பெர்னால்டோ என்பவரிடம் இருந்து கடன் வாங்கியதற்கு ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால், இல்லை நான் ரொக்கமாக பணத்தை கையில் பெற்றேன். நான் வழக்கமாக கடன் வாங்கும் பொழுது நேரடியாக ரொக்கமாக பணத்தைப் பெற்றுக் கொண்டு அதனை திரும்பக் கொடுக்கும் பொழுது வங்கியின் மூலம் கொடுப்பது எனது யுக்தி என்றால், சரியல்ல.

7. 2017–2018 காலக்கட்டத்தில் நானும் எனது அம்மாவும் கடன் பெறும் சூழ்நிலையயில் தான் இருந்தோம் என்றால், சரியல்ல. 07.05.2017 அன்று 30லட்சம், மற்றும் 07.05.2018 தேதியில் 25லட்சம் பெற்று மொத்தம் 55 லட்சம் கடனாக புகார்தாரரிடம் இருந்து வாங்கியுள்ளேன் என்றால், இல்லை.

8. டிசம்பர் 2018ல் எனக்கு வேலை போய்விட்டது என்றால், சரியல்ல. 14.11.2021 அன்று நான் புகார்தாரருக்கு கொடுத்த வேண்டிய 55லட்சம் கடனுக்கு 16.11.2021 தேதியிட்ட Union Bank காசோலைகளை புகார்தாரரிடம் கொடுத்தேன் என்றால், இல்லை. புகார்தாரரை எனக்கு நேரடியாக கொடுக்கல் வாங்கல் இல்லை என்று எனது நீதிமன்ற முதல்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான்.

9. வங்கியின் மூலம் 19லட்சத்து 60ஆயிரம் புகார்தாரர் வங்கிக் கணக்கில் செலுத்தியதாக கூறிவிட்டு தற்பொழுது புகார்தாரருக்கும் எனக்கும் நேரடியாக பணம் கொடுக்கல் வாங்கல் இல்லை என்று சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால், சரியல்ல. நான் புகார்தாரரிடம் கடன் வாங்கியதால் தான் வங்கியின் மூலம் எங்கள் இருவருக்கிடையில் பணபரிவர்த்தனைகள் நடைபெற்றது என்றால், சரியல்ல.

10. நான் புகார்தாரரிடம் இருந்து எந்தவித ஆவணங்களும் இல்லாமல் கடன் தொகை நேரடியாக பெற்றுக் கொண்டு நான் திரும்ப செலுத்தும் போது அதனை வங்கியின் மூலம் குறைந்த தொகையை செலுத்தி முழுக்கடன் தொகையும் செலுத்திவிட்டதாக சொல்வது எனது யுக்தி என்றால், இல்லை.

11. புகார்தாரரிடம் எனக்கு நேரடியாக கொடுக்கல் வாங்கல் இல்லை என்றும் வங்கியின் மூலம் தான் உள்ளது என்று சொல்வதை பொறுத்து புகார்தாரரின் வங்கி கணக்கு எனக்கு எந்த வகையில் தெரியும் என்றால், மேற்படி ரூஸ்வெல்ட் பெர்னால்டோ என்பவரிடம் கடன் வாங்கும் பொழுது புகார்தாரர் அவரது வங்கிக்

கணக்கின் விவரங்களை என்னிடம் கொடுத்து அதில் பணத்தை செலுத்துமாறு கூறினார். அதனடிப்படையில் புகார்தாரரின் வங்கி விவரங்கள் எனக்குத் தெரியும். மேற்படி சங்கதிகளுக்கு எந்தவொரு ஆவணங்களும் இல்லை என்பதால், அது இவ்வழக்கிற்காக கூறப்படும் பொய் என்றால், சரியல்ல.

12. இவ்வழக்கின் வழக்கறிவிப்பு முட்டம் முகவரிக்கு அனுப்பப்பட்டு அது எனக்கு Intimation பெற்றும்1 அதனை நான் வாங்கவில்லை என்றால், சரியல்ல. இவ்வழக்கு அழைப்பாணை நீதிமன்றம் மூலம் அதே முகவரிக்கு அனுப்பப்பட்டு நான் பெற்றேன் என்றால், சரிதான். முட்டம் விலாசத்திற்கு அனுப்பப்பட்ட வழக்கறிவிப்பு காசோலை மூலம் தாக்கல் செய்யப்படும் வழக்கின் அறிவிப்பு என்பதால் நான் அதனை தெரிந்து பெறவில்லை என்றால், சரியல்ல.

13. என்னிடம் காட்டப்படும் Ex.P1 காசோலை என்னுடையது தான் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் Ex.P1 காசோலையை தான் புகார்தாரர் எனது வீட்டில் இருந்து திருடி சென்றார் என்றால், சரிதான். மேற்படி காசோலை எனது சென்னையில் உள்ள வீட்டில் தான் உள்ளது என்றால், இல்லை அது என் அம்மா வீட்டில் முட்டத்தில் உள்ளது. நான் எனது முதல் விசாரணையில் 2012ம் வருடத்தில் இருந்து சென்னையில் வசித்து வருவதாகவும் அதன் பிறகு ஊருக்கு வரவில்லை என்று சாட்சியம் அளித்த நிலையில் மேற்படி காசோலை எனது முட்டத்தில் உள்ள எனது அம்மா வீட்டில் இருப்பதற்கு வாய்ப்பில்லை என்றால், சரியல்ல.

14. இவ்வழக்கு காசோலை வங்கிக்கணக்கு எனக்கும் எனது அம்மாவிற்கும் Joint Account இல்லை என்றால், சரிதான். மேற்படி காசோலை முட்டம் விலாசத்தில் இருப்பதாக சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால், சரியல்ல. இவ்வழக்கு காசோலை எந்த தேதியில் தொலைந்து போனது என்றால், இவ்வழக்கு அழைப்பாணை வரும் பொழுது தான் எனக்குத் தெரியும்.

15. இவ்வழக்கு காசோலை எனது அம்மா வீட்டில் Hall–ல் வைக்கப்பட்டதா அல்லது பீரோவில் வைக்கப்பட்டதா என்றால், வீட்டில் உள்ள Self–ல் வைக்கப்பட்டது. இவ்வழக்கில் தொலைந்து போனதாக சொல்லப்படும் காசோலை முழு காசோலை புத்தகமாக தொலைந்து போனது என்றால், இல்லை நடுவில் இருக்கும் இவ்வழக்கு காசோலை மட்டும் தொலைந்து போனது. நான் நீதிமன்ற முதல் விசாரணையில் புகார்தாரர் குடும்ப நண்பராக இருந்த போது வந்து செல்கையில் எனது காசோலையை

புகார்தாரர் எடுத்துச் சென்றுவிட்டார் என்று தெரிந்தும் நான் ஏன் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால், நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பிறகு தான் எனக்கு தொலைந்து போன விவரம் பற்றி தெரியும். அதனால் நான் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை.

16. புகார்தாரர் எனது காசோலையை திருடி சென்றதாக சொல்வது இவ்வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால், சரியல்ல. நான் சென்னையில் சத்யபாமா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் வேலை செய்கிறேன் என்றால், சரிதான். நான் ஒரு பொறியியல் பட்டதாரி இல்லை என்றால், சரிதான். மேற்படி பல்கலைகழக்கித்தின் தாளாளர் முட்டத்தைச் சேர்ந்தவர் என்றால், சரிதான்.

17. மேற்படி பல்கழைக்கழகத்தில் துணை வேந்தரை தாளளரே நியமிக்கலாம் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் அந்த பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறை சார்ந்த எந்த Department–லும் பணி செய்யவில்லை என்றால், சரிதான். நான் அந்த பல்கலைகழக்கத்தில் எந்த பணி செய்து வருகிறேன் என்றால், துணை வேந்தர் அலுவலகத்தில் Project Assistant ஆக பணி செய்து வருகிறேன். அது நிரந்தரப் பணி என்றால், சரிதான்.

18. அந்த பல்கலைக்கழகத்தின் விதிகளுக்கு எனது பணி உட்பட்டதா என்றால், சரிதான். எனது பணிக்கு துறைரீதியாக கொடுக்கப்படும் PF, Gratuity போன்ற சலுகைகள் உள்ளதா என்றால், இல்லை. ஆனால் Medical Leave, Emergency Leave உள்ளது. நான் பணிநிமித்தமாக வெளியே சென்றாலோ அல்லது மாற்றுப்பணிக்கு சென்றாலோ அங்குள்ள பதிவேடுகளில் குறிப்பிட்டுவிட்டு செல்வேன் என்றால், எனக்கு பணிநிமித்தமாக வெளியே செல்வதற்கு வேலையில்லை.

19. நான் 07.05.2017 அன்று Project Assistant ஆக மேற்படி பல்கலைக்கழகத்தில் வருகை பதிவேட்டில் கையெழுத்து செய்தேனா என்றால், அன்றைய தேதியில் நான் ISRO Exam பணியில் பணியாளராக வேலை செய்தேன். அதனால் அன்று நான் வருகை பதிவேட்டில் கையெழுத்திடவில்லை. ஆனால் அந்த பணியிற்கான ஊதியத்தை நான் பெற்றேன்.

20. மேற்படி Ex.D11ல் ISRO முத்திரை இல்லை என்பதால் அது வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால், இல்லை. நான் மேற்படி தேர்வில் நேரடியாக பணியில் இருந்ததற்கு நீதிமன்றத்தில் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை

என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் Ex.D8 Appointment orderல் ஆவணத்தில் எனது சம்பளம் மாதம் 5ஆயிரம் ரூபாய் என்றால், சரிதான்.

21. மேற்படி பல்கலைக்கழகத்தில் நான் நிரந்தர ஊழியர் என்பதற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் 07.05.2017 அன்றைய தினம் பணிக்கு செல்லாமலே பணியில் இருந்ததாக சொல்லலாம் என்றால், சரியல்ல. 07.05.2017 மற்றும் 07.05.2018 போன்ற தேதிகளில் நான் வேலைக்கு செல்லாமலே அன்றைய தினம் இருந்தது போல் ஆவணங்கள் தயார் செய்யலாம் என்றால், சரியல்ல.

22. மேற்படி வருகைப் பதிவேடு எந்த ஒரு அரசாங்க தணிக்கைக்கு உட்படுத்தப்படாது என்றால், அந்த பதிவேடுகளை அரசாங்கம் தணிக்கை செய்வதற்கு தேவைப்படாததால் அரசாங்கம் அதனை தணிக்கை செய்யாது. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள சத்யபாமா பல்கலைக்கழகத்தின் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளதக்க ஆவணங்கள் இல்லை என்றால், சரியல்ல. அந்த ஆவணங்களில் நம்பகத்தன்மைக் குறைவு என்றால், சரியல்ல.

23. என்னிடம் காட்டப்படும் காசோலையில் என்னுடைய கையொப்பம் இல்லை என்றால், சரிதான். நான் காசோலையில் கையொப்பத்தை வேண்டுமென்றே கையொப்பத்தை மாற்றிப் போட்டேன் என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் காசோலையில் கையொப்பம் ஆங்கிலத்தில் போடப்பட்டுள்ளது என்றால், சரிதான். புகார்தாரருக்கு ஆங்கிலம் தெரியாது என்பதால் அவர் ஆங்கிலத்தில் கையொப்பம் போடத்தெரியாது என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

24. Union Bank மேலாளரை எனது மாதிரி கையொப்பத்தை வங்கியில் இருந்து எடுத்துவருவதற்காகத் தான் அவரை வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டது என்றால், சரிதான். நான் வங்கி ஊழியர்களை பயன்படுத்தி என்னுடைய கையெழுத்தை மாறுதல் என்று காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணையில் குறிப்பிடச் சொன்னேன் என்றால், சரியல்ல.

25. நான் இவ்வழக்கில் ஏன் பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்றால், ஏற்கனவே நான் வங்கி ஊழியர்களை வைத்து கையெழுத்து மாறுதல் என்று திருப்பப்பட்டுள்ள விவரம் அறிந்து தான் இவ்வழக்கில் பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்தேன்

என்றால், சரியல்ல. நான் இவ்வழக்கில் எடுத்துள்ள கட்சிகள் இவ்வழக்கிற்காக பொய்யாக எடுக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

26. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழகக்கிற்காக காசோலை கொடுப்பதற்கு முன்பே தயார் செய்தது என்றால், சரியல்ல. நான் புகார்தாரருக்கு இவ்வழக்கு காசோலை தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.